# Chezhumai செழுமை

# TIST India



T I S T F a r m e r s H e l p W o r l d w i d e P r o b l e m

## The International Small Group & Tree Planting Program

TIST India: 19/8, Lake View Road, Kottur, Chennai 600 085, Tamil Nadu, India
Phone : +91 44 42188438 / Mobile: +91 9840299822 / Email: josephrexon@tist.org

## HELPLINE

For any information or help Dial 9003020836 / 9003020839 / 9003020843

If you have any difficulty in TIST Program Dial 9840299822

Our landline: +91 44 42188438

Our email: josephrexon@tist.org

Our address: 19/8, Lake View Road, Kottur, Chennai 600085

## தொழில்முறை உதவி

எந்த தகவல் மற்றும் உதவிக்கு டயல் பண்ணுங்கள் : 9003020836 / 9003020839 / 9003020843

உங்களுக்கு டி.ஐ.எஸ்.டி. திட்டத்தில் ஏதாவது கஷ்டம் இருப்பின் டயல் பண்ணுங்கள் : 9840299822

எமது நிலவழி இணைப்பு : +91 4442188438

எமது மின்அஞ்சல் : Josephrexon@tist.org

எமது விலாசம் : 19/8 ஏரிக்கரைச் சாலை கோட்டூர், சென்னை 600085

## Small Groups Best Techniques / சிறு குழுக்களின் சிறந்த நுணுக்கங்கள்

**What do you do if more than twelve people want to join your group?**

**Answer:** If there are more than twelve people interested in joining your group it is best to form a new group. The group can split in two; or three or four members of the original group can form the core of the new group. This is better than one member trying to start a group alone.

**12 பேர்களுக்கு மேல் உங்கள் குழுவில் சேர விரும்பினால் நீங்கள் என்ன செய்வீர்கள் ?**

**பதில்:** 12 பேர்களுக்கு மேல் இருப்பின் புதிய குழுவை அழைப்பதே சிறந்தது. ஏற்கனவே உள்ள குழு அங்கத்தினர் 2 அல்லது 3 அல்லது 4 ஆக பிரிந்து புதிய குழுவின் அங்கத்தினர்களாக இருந்து செயல்படலாம். ஒருவர் மட்டும் ஒரு குழுவை அமைக்க முயலுவதற்கு பதிலாக மேற்கூறிய வகையில் செயல்படுவதே நல்லது.

**What is the best way to arrange people during a small group meeting?**

**Answer:** Small circle is the best way - avoid using tables because they create barriers between people.

**சிறு குழுக்களின் கூட்டத்திற்கு வரும் மக்களை ஒழுங்குப்படுத்த சிறந்த வழி எது ?**

**பதில்:** சிறிய வட்ட அமைப்பில் அமருவதே சிறந்தது. மேஜைகளை தவிர்க்கவும், மக்களுக்கிடையே அவை தடைகளாக இருக்கும்.



Meeting in small circle / சிறிய வட்ட அமைப்பில் கூட்டம்

Sign the GHG agreement and take the Voucher payment.
ஜிஎச்ஜி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு உடனடியாக வவுச்சர் தொகையைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

Are you ready with your seedlings for transplanting? Its raining
தங்கள் நாற்றுக்கன்றுகளுடன் தாங்கள் தயாராக உள்ளீர்களா ? மழைக்காலத்தை நன்றாக பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

## Indhirani Small Group of Thirupathur Center

The members of this group are practicing the best practices of TIST at Paichal Village of Thirupathur Center. They have two different types of tree species like Teak and Kumil in their two groves namely, Appunu and Rani2, all totaling to 510 trees. The members of this group water their trees by bringing water in pots when there is no intercrop. Gram and Groundnut are practiced as intercrop in between the trees.

## திருப்பத்துர் மையத்தை சார்ந்த இந்திராணி சிறுகுழு

இந்திராணி சிறுகுழுவை சார்ந்த உறுப்பினர்கள் திருப்பத்துரர் மையத்தில் உள்ள பாய்ச்சல் கிராமத்தில் TIST யின் சிறந்த பயிற்சி முறைகளை கடைப்பிடித்து வருகின்றனர். இவர்களிடம் இரண்டு மரவகைகளான தேக்கு மற்றும் குமிழ் மரங்கள் உள்ளன. இம்மரங்களை அப்புனூ மற்றும் ராணி2 என்ற இரண்டு தோப்புகளில் நடவுசெய்துள்ளன, இவை இரண்டு தோப்புகளில் 510 மரங்கள் உள்ளன. ஊடுபயிர் செய்யாத நேரங்களில் இக்குழு உறுப்பினர்கள் குடங்களில் தண்ணீர் கொண்டு வந்து இம்மரங்களுக்கு நீர் பாசனம் செய்வார்கள். மரங்களுக்கு இடையே இக்குழு உறுப்பினர்கள் பருப்பு மற்றும் வேர்க்கடலை போன்ற குறுகிய கால பயிற்களை ஊடுபயிராக செய்து வருகின்றனர்.



Member of Indhirani Small Group in Kumil Tree Grove
இந்திராணி சிறுகுழுவை சார்ந்த உறுப்பினர் குமிழ் மர தோப்பில்

## Elumalai Small Group of Kandhavaradi Center

The members of this group are practicing the best practices of TIST at Septakulam Village of Kandhavarady Center. The group members have 589 Teak trees in their grove. When these trees where in seedling stage, the members took great care in protecting the seedlings, like the seedlings were arranged all around banana trees to protect the seedlings from direct sun light. The available water for the banana trees was sprinkled for the seedlings too. While planting these seedlings, good spacing was given between each trees and natural manure is used regularly. When the trees were small in size, the members practiced intercrops regularly. Moreover, they practice intercrops according to the seasonal demand, like watermelon which is a need during summer.

## கந்தவாராடி மையத்தை சார்நத ஏழுமலை சிறுகுழு

ஏழுமலை சிறுகுழுவை சார்ந்த உறுப்பினர்கள் கந்தவாராடி மையத்தில் உள்ள சப்டாகுளம் கிராமத்தில் TIST யின் சிறந்த பயிற்சி முறைகளை கடைப்பிடித்து வருகின்றனர். இக்குழுவிடம் 589 தேக்கு மரங்கள் உள்ளன. இம்மரங்கள் கன்றுகளாக இருந்த போது உறுப்பினர்கள் அனைவரும் மிகுந்த அக்கரையோடு இக்கன்றுகளை பராமரித்து பாதுகாத்தனர். இக்கன்றுகளை வாழைமரத்திற்க்கு கீழே வைத்து சூரிய வெப்பத்தில் இருந்து பாதுகாத்தனர். வாழைமரத்திற்கு தண்ணீர் ஊற்றும் போது அந்த கன்றுகளுக்கும் தண்ணீர் கிடைத்தது. இந்த கன்றுகளை நடவு செய்யும் போழுது நல்ல இடைவெளி விட்டு நடவு செய்தனர் மற்றும் இயற்கை உரத்தை நல்ல ஒழுங்குடைய முறையில் பயன்படுத்தினர். இம்மரங்கள் சிறிதாக இருந்த காலகட்டங்களில் இக்குழு உறுப்பினர்கள் ஊடுபயிர் செய்தனர். காலத்திற்க்கு மற்றும் சந்தைக்கு ஏற்ற போல் இக்குழு உறுப்பினர்கள் ஊடுபயிர் செய்தனர். தர்பூசணி வெப்பக்காலத்திற்கு தேவையானது இதை இக்குழு உறுப்பினர்கள் பயிர் செய்தனர்.



Member of Elumalai Small Group in Teak Tree Grove
ஏழுமலை சிறுகுழுவை சார்ந்த உறுப்பினர் தேக்கு மர தோப்பில்

## Poongothai Small Group of Chetpet Center

The members of this group are following the best practices of TIST at Bagavanthapuram Village at Chetpet Center. The members of this group have planted 1,150 Kumil trees in a grove called Deveraj. In few villages, farmers have named this tree as "Kumil Theku", means Kumil Teak. The farmers say that, Kumil is also equal to Teak and so they call it kumil theku. These trees are planted with good spacing, and so the trees are growing well. In the beginning, when the trees were small in size, the members were practicing green chilly and groundnut as intercropping. The members say that, they had practiced the intercropping regularly that helped the trees to grow well, because whatever work, water and natural manure they did for the intercrops went to the trees too. Practicing intercrop in the initial stages of the trees is one of the good practices of tree growing farmers of TIST.

## சேத்துப்பட்டு மையத்தை சார்ந்த பூங்கோதை சிறுகுழு

பூங்கோதை சிறுகுழுவை சார்ந்த உறுப்பினர்கள் சேத்துப்பட்டு மையத்தில் உள்ள பகவந்தபுரம் கிராமத்தில் TIST யின் சிறந்த பயிற்சி முறைகளை கடைப்பிடித்து வருகின்றனர். இக்குழு உறுப்பினர்கள் தேவராஜ் என்ற தோப்பில் 1150 குமிழ் மரங்களை நடவு செய்தனர். ஓர் சில கிராமங்களில் விவசாயிகள் குமிழ் மரத்தை குமிழ் தேக்கு என்று சொல்வார்கள், எனெனில் குமிழ்மரமும் தரத்தில் தேக்கு மரத்திற்கு இணையானது ஆகவே இம்மரத்தை குமிழ்தேக்கு என்று கூறுவார்கள். இக்குழு உறுப்பினர்கள் மரங்களை நன்கு இடைவெளி விட்டு நடவு செய்ததினால் இம்மரங்கள் நல்ல வேகமாக வளர்கின்றன. ஆரம்பக்கட்டத்தில் இம்மரங்கள் சிறிதாக இருந்த போது பச்சைமிளகாய் மற்றும் வேர்க்கடலை ஊடுபயிராக செய்யபட்டது. ஊடுபயிர் செய்யும் போழுது இப்பயிர்களுக்கு தேவையான உழைப்பு, தண்ணீர் மற்றும் இயற்கை உரம் அணைத்தும் இம்மரங்களுக்கு கிடைத்தது, அதனால் எங்கள் மரங்கள் வேகமாக வளர்ந்தது என்று இக்குழு உறுப்பினர்கள் கூறுகின்றனர். மரங்களுகிடையே ஊடுபயிர் செய்வது மரங்கள் நடும் விவசாயிகளின் ஓர் சிறந்த பயிற்சி முறையாகும்.



Kumil trees of Poongothai Small Group
பூங்கோதை சிறுகுழுவை சார்ந்த குமிழ் மரங்கள்

## Om muruga Small Group of Vellore Center

The members of this group are practicing the best practices of TIST at Kilkothur Village of Vellore Center. They have three groves; in all Teak trees are planted. During last quantification there are 921 Teak trees with this group.

## வேலூர் மையத்தை சாாந்த ஓம்முருகா சிறுகுழு

ஓம்முருகா சிறுகுழுவை சார்ந்த உறுப்பினர்கள் வேலூர் மையத்தில் உள்ள கீழ்கொத்தூர் கிராமத்தில் TIST யின் சிறந்த பயிற்சி முறைகளை கடைப்பிடித்து வருகின்றனர். இக்குழு உறுப்பினர்கள் மூன்று தோப்புகளில் தேக்கு மரங்களை நடவு செய்துள்ளனர். கடைசியாக எடுத்த கணக்கெடுப்பின்படி இக்குழுவிடம் 921 தேக்கு மரங்கள் உள்ளன.



Members of Om Muruga Small Group in Teak Tree Grove
ஓம்முருகா சிறுகுழுவை சார்ந்த உறுப்பினர்கள் தேக்கு மர தோப்பில்

## Best practices followed by the small groups of this month Chezhumai

- Planting trees with good spacing
- Using natural manure regularly for trees
- Practicing intercrops according to seasonal & market need
- Determined hard work

## இம்மாத செழுமை இதழில் வரும் நான்கு சிறுகுழுவினரின் சிறந்த பயிற்ச்சி முறைகள்

- நன்கு இடைவெளிவிட்டு மரங்களை நடவு செய்வது
- மரங்கள் மற்றும் விவசாயத்திற்க்கும் இயற்கை உரத்தை பயன்படுத்துவது.
- காலத்திற்க்கு மற்றும் சந்தைக்கு ஏற்றவாறு ஊடுபயிர் செய்வது.
- மன உறுதி மிக்க கடின உழைப்பு

## Free seedlings for members of Mambakkam area

Since 2006, Innerwheel Club is donating seedlings to TIST members. This year on 24.10.2009 they donated 6000 Teak seedlings to the TIST members at Mambakkam village. Innerwheel Club members visited the Mambakkam village and had interaction with the TIST members. They also visited the groves of the members. The club members promised to donate seedlings next year too.

## மாம்பாக்கம் பகுதியில் உள்ள உறுப்பினர்களுக்கு இலவச கன்றுகள்

2006-ம் ஆண்டில் இருந்து இன்னர் வீல் கிளப் TIST உறுப்பினர்களுக்கு இலவச கன்றுகள் வழங்கி வருகின்றனர். இந்த வருடமும் 24-10-2009 அன்று மாம்பாக்கம் கிராமத்தில் உள்ள TIST உறுப்பினர்களுக்கு 6000 தேக்கு கன்றுகள் இலவசமாக வழங்கப்பட்டது. இன்னர் வீல் கிளப்பை சார்ந்த உறுப்பினர்கள் மாம்பாக்கம் கிராமத்தில் உள்ள TIST உறுப்பினர்களிடையே கலந்து உரையாடினார்கள். அவர்கள் சில மரத்தோப்புகளையும் பார்வையிட்டார்கள். இந்த கிளப் உறுப்பினர்கள் அடுத்த வருடமும் இலவச கன்றுகளை வழங்குவார்கள் என்று உறுதி அளித்தார்கள்.






Members of Innerwheel Club at Mambakkam Village
இன்னர் வீல் கிளப் உறுப்பினர்கள் மாம்பாக்கம் கிராமத்தில்






Members of Innerwheel Club at Mambakkam Village
இன்னர் வீல் கிளப் உறுப்பினர்கள் மாம்பாக்கம் கிராமத்தில்

# டிஐஎஸ்டி நிகழ்வில் பங்குகொள்ள அங்கத்தினர்கள் பூர்த்தி செய்ய வேண்டிய தகுதிகள்

1. ஒவ்வொரு சிறு குழுவிலும் குறைந்தது மூன்று வெவ்வேறு குடும்பங்களை சார்ந்த 6 முதல் 12 உறுப்பினர்கள் இருக்க வேண்டும்.

2. ஒவ்வொரு சிறு குழுவும் குறைந்தது 1,000 உயிர் மரங்களை, டிஐஎஸ்டியில் சேர்ந்த ஒரு வருடத்திற்குள் வளர்க்க வேண்டும்.

3. டிஐஎஸ்டியில் சேர்ந்து ஐந்து வருடங்களுக்குள் குறைந்தது 5,000 உயிர் மரங்களை கொண்டிருக்க வேண்டும்.

4. உங்கள் சிறு குழு ஒவ்வொரு வருடமும் 20, வருடங்களுக்கு அழிந்த அல்ல விழுந்தபோன மரங்களின் இடத்தில் புதிய மரங்களை வளர்க்க வேண்டும.,

5. எல்லா சிறு குழுவும் கீரீன்ஹவுஸ் உடன்படிக்கையில் கையெழுத்திட வேண்டும்.

6. டிஐஎஸ்டி ஒரு வருடத்திற்கு ஒரு உயிர் மரத்திற்கு ரூ.1.50 (US $0.03) கொடுக்கும் (கீரீன் ஹவுஸ் உடன்படிக்கையை படித்து மேலும் விவரங்களை தெரிந்து கொள்ளுங்கள்).

7. புதர்கள் அல்லது 4மீ உயரத்திற்கு குறைவாக வளரும் இனவகை மரங்களை டிஐஎஸ்டி மரமாக கணக்கில் எடுத்து கொள்ளாது.

8. 2மீஇடைவெளிக்கும் குறைவாக பயிரிடப்படும் மரங்கள் கணக்கில் எடுக்க இயலாது.

9. 10 வருடங்கள் அதற்கு மேல் வளர்ந்த மரங்களையே டிஐஎஸ்டி அறுவடை செய்ய அனுமதியளிக்கும். எனினும் ஒரு வருடத்திற்கு 5 சதவிகிதத்திற்கு மேலாக அறுவடை செய்ய கூடாது.

10. ஒவ்வொரு சிறு குழுவும் 33 சதவிகிதத்திற்கும் குறைவாகவே குறுகியகால மரங்கள் இருக்கவேண்டும். (உ.த. தைலமரம்) தற்பொழுதிய குழுக்கள் 33 சதவிகிதத்திற்கு மேல் குறுகியகால சுழற்சி முறை மரங்களை வளர்ப்பின் அவர்கள் 5 வருடம் (2012) வரை கூடுதலான மரங்களை வளர்க்க காலம் கொடுக்கப்படும். அல்லது இந்த தகுதியடையும் வரை மரங்களை அறுவடை செய்ய இயலாது.

11. டிஐஎஸ்டி சிறு குழுக்கள் ஆண்டிற்கு ஒரு முறை கட்டாயமாக ஆய்வாளர்களை அழைத்து தங்கள் தோப்பினை ஆய்வு செய்து கொள்ள வேண்டும். இவர்கள் மற்ற சிறு குழுவினரோடு சேர்ந்து ஆய்வின் பொழுது, ஆய்வாளர்களுக்கு உணவும், தங்கும் இடமும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

12. சிறு குழு அங்கத்தினர் ஒன்றாக கூடி தங்களின் பயிற்சி முறைகளையும். ஆலோசனைகளையும் பகிர்ந்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு வாரமும் சந்திக்க இயலாவிட்டால் மாதம் ஒரு முறையாவது சந்திக்க வேண்டும்.

13. சிறு குழு அங்கத்தினர் தாங்கள் மரங்களை வளர்க்கும் நிலத்தின் உரிமை சான்றினை அளிக்க வேண்டும்.

14. குழுவின் அங்கத்தினர்கள் டிஐஎஸ்டி பயிற்சியில் பங்கு கொண்டு மற்ற குழுக்களுடன் தங்களின் சிறப்பு பயிற்சி முறைகளை பகிர்ந்து கொள்ளவேண்டும்.

15. உங்கள் சிறு குழு உள்ள பகுதியில் மற்ற சிறு குழுக்களும் நடந்து செல்லும் தூரத்தில் அமைந்திருக்க வேண்டும். ஒரு வருடத்திற்குள் 100,000 மரங்களும் 5 வருடங்களுக்குள் 300,000 மரங்கள் வளர்க்கும் தகுதியும் கொண்டிருக்க வேண்டும்.